**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No. 32/2013 |
| Prosecution Witness | : | **அ.சா.**11 |
| Name | : | பழனிவேல் |
| Father's / Husband Name | : | சுப்பிரமணியன் |
| Address | : | திருச்சி |
| Age | : | 51/2024 |

**தேதி : 25.11.2024**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் திருச்சி கே.கே.நகரில் உள்ள ஆச்சார்யா பள்ளியில் நிர்வாக அலுவலராக பணிபுரிந்துவருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். எதிரி வேல்குமாரை தெரியாது. கடந்த 1999 முதல் 2014 வரை திருச்சி கே.கே.நகரில் உள்ள ஆல்பா பள்ளியில் மேனேஜராக வேலை செய்தேன். அப்போது நான் வேலை செய்யும் பள்ளியின் சேர்மன் டாக்டர். ஆர். பழனி என்பவர் கல்லூரி ஒன்றை கட்டுவதற்காக இடம் பார்த்துக்கொண்டிருந்தார். அப்போது ஆஜர் எதிரிகள் ஒரு புரோக்கர் மூலமாக இடம் வாங்கி தருவதாக கூறினார்கள். ஆஜர் எதிரிகளும் ஆல்பா foundation chairman –னும் இடம் வாங்கி தருவதற்காக உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டார்கள்.

பாடாலூரில் 200 ஏக்கர் நிலம் வாங்குவதற்காக இடம் பார்த்துக்கொண்டிருந்தார். ஜான்சி மற்றும் பெல்லா சாவித்ரி ஆகியோருக்கு சொந்தமான 10 ஏக்கர் நிலத்தை ப வர் பத்திரம் மூலம் வாங்கி எங்களது சேர்மன்

பெயரில் கிரையம் எழுதி கொடுப்பதாக சொல்லி இயேசுவடியான் சேர்மனிடமிருந்து மொத்தம் 30 லட்சம் வாங்கினார். ரொக்கமாக இயேசுவடியான் வாங்கினார். மேற்படி பெல்லா சாவித்திரி, ஜான்சி ஆகியோரிடமிருந்து இயேசுவடியான் பவர் பத்திரம் வாங்கியிருந்தார். அந்த பவர் பத்திரத்தின் அடிப்படையில் எங்களது சேர்மன் கிரையம் செய்ய சென்றபோது அந்த பவர் பத்திரத்தில் உள்ள சொத்துக்கள் ஏற்கெனவே கிரையம் செய்யப்பட்டுவிட்டதாக செட்டிக்குளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சொன்னார்கள். இதற்கிடையில் டாக்டர். பழனி அவருக்கு சொந்தமான ஒரு ஏக்கர் நிலத்தில் இயேசுவடியான் பெயரில் பவர் பத்திரம் எழுதிகொடுத்தார். பிறகு ஒரு வாரம் கழித்து செட்டிக்குளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சென்று விசாரித்தபோது 12 ஏக்கர் 45 செண்ட் என்று பவர் பத்திரத்தில் மோசடி செய்து பழனியின் கையெழுத்து போல் கையெழுத்து போட்டு வேறொருவருக்கு விற்பனை செய்தது தெரியவந்தது.

இது குறித்து இயேசுவடியானிடம் விவரம் கேட்டபோது அவர் சரியாக பதில் அளிக்கவில்லை. பெல்லா சாவித்திரி, ஜான்சி ஆகியோர் எங்களுடைய பள்ளிக்கு வந்து இயேசுவடியான் 7 ஏக்கர் நிலத்திற்கு பதிலாக 10 ஏக்கர் என்று எழுதிவாங்கிகொண்டதாகவும் பத்திரம் தவறாக இருப்பதாகவும் சொல்லி இயேசுவடியான் மீது புகார் கொடுத்துள்ளதாக சொன்னார்கள். அதன்பிறகு பெரம்பலூர் நில அபகரிப்பு சம்பந்தமான போலீஸார் விசாரித்தார்கள்.

<u>**குறுக்கு விசாரணை**</u>

இயேசுவடியானுக்கும், எங்களது foundation chairman பழனிக்கும் இடையே எழுத்துபூர்வமான உடன்படிக்கை இருந்தது என்றால் சரிதான். உடன்படிக்கையை எங்களது foundation ஆபிஸில் வைத்துதான் தயார் செய்தோம் என்றால் சரிதான். அதற்கான சர்வே விவரங்களை இயேசுவடியான்

சொன்னார். போலீஸார் விசாரித்தபோது உடன்படிக்கைகளை போலீஸிடம் கொடுத்தோமா என்றால் காண்பித்தோம், கொடுக்கவில்லை. பழனிக்கும், இயேசுவடியானுக்கிடையில் எத்தனை உடன்படிக்கை ஏற்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியாது. உடன்படிக்கையில் நான் சாட்சி கையெழுத்து போட்டேனா என்றால்இல்லை.

எனக்கு ஒரு உடன்படிக்கை பற்றி தெரியும். அதில் உள்ள சர்வே எண்கள் எனக்கு தெரியும். உடன்படிக்கையில் கட்டுப்பட்டதாக சொல்லப்படும் 100 ஏக்கர் நிலம் யார், யாருக்கு சொந்தமானது, யார், யாருக்கு எவ்வளவு தொகை விலை பேசப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இயேசுவடியான் பெரம்பலூர் மாவட்ட நீதிமன்றத்தில் என்னுடைய சேர்மன் பழனிக்கு எதிராக 100 ஏக்கர் நிலத்தை கிரையம் செய்து கொடுக்கவேண்டும் என்று ஏற்றதை ஆற்றுக பரிகாரம் குறித்து வழக்கு போட்டுள்ள விவரம் தெரியாது. நான் போலீஸிடம் ஜான்சி, பெல்லா சாவித்திரி நிலத்தை குறித்து அபிடவிட் கொடுத்தேன். என்னுடைய சேர்மன் நிலத்தை கிரையமாக வேண்டிய நிலையில் உள்ளவர் ஏன் இயேசுவடியானுக்கு ஒரு ஏக்கர் நிலத்தை பவர் பத்திரம் கொடுத்தார் என்றால் ஒரு சொத்து தவறாக இருந்ததால் அதை திரும்ப கொடுத்துவிடவேண்டி இயேசுவடியான் சொன்னதால் எழுதி கொடுத்ததாக பழனி என்னிடம் சொன்னார்.

என்னுடைய சேர்மன் பவர் பத்திரத்தை படித்துபார்த்துதான் கையெழுத்து போடுவார் என்றால் சரிதான். சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வந்து பவர் பத்திரம் பதிவு செய்து கொடுத்தார் என்றால் சரிதான். சார்பதிவாளர் என்ன பத்திரத்தை பதிவு செய்கிறோம் என்று எழுதி கொடுத்தவரிடம் விசாரணை செய்து பார்த்துதான் பதிவு செய்வார் என்றால் சரிதான். ஒரு ஏக்கருக்கு பதிலாக 12 ஏக்கர் 41 செண்ட் என்று பவர் பத்திரம் பதிவு செய்தது குறித்து இசேசுவடியானுக்கு எதிராக என்னுடைய சேர்மன் பழனி புகார் கொடுத்தாரா

என்றால் தெரியவில்லை. அந்த பவர் பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். அந்த பத்திரத்தில் நான் சாட்சி கையெழுத்து போட்ட பக்கங்கள் இல்லை. இதை நான் எப்போது தெரிந்துகொண்டேன் என்றால் சார்பதிவாளர் அலுவலகத்தில் விசாரித்து தெரிந்துகொண்டேன். அந்த பத்திரத்தின் ஜெராக்ஸ் காபியை பார்த்தேன். அதை போலீஸிடம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன்.

நான் போலீஸிடம் பவர் பத்திரத்தின் நகலை கொடுக்கவில்லை என்றாலும், கொடுத்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலியான பவர் பத்திரம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு தெரிந்ததாக சொல்லும் ஒரு உடன்படிக்கை தவிர இயேசுவடியானுக்கும், பழனிக்கும் இடையே ஏற்பட்ட வேறு வரவு, செலவுகள் குறித்து எனக்கு தெரியாது. இயேசுவடியான் ஏமாற்றவில்லை என்பதால்தான் தனியாக புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல, இயேசுவடியானை கூப்பிட்டு தனியாக கண்டித்து இனிமேல் இதுபோல் செய்யவேண்டாம் என்று சொன்னோம். என்னுடைய சேர்மன் பழனிக்கு ஆதரவாக இயேசுவடியானுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.